**முக்கியமான நாட்கள்**

நவம்பர் 5 - உலக சுனாமி விழிப்புணர்வு தினம்

- 2015 ஆம் ஆண்டில், உலக சுனாமி விழிப்புணர்வு தினமாக நவம்பர் 5ம் தேதியை ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபை பரிந்துரைத்தது.
- இந்த நிகழ்வை நினைவுகூரும் வகையில் AMCDRR (பேரழிவு ஆபத்து குறைப்புக்கான ஆசிய அமைச்சக மாநாட்டில்) பேரழிவு ஆபத்து குறைப்பு (DRR) உடன் நிகழ்வுகளை ஏற்பாடு செய்வதன் மூலம் கொண்டாடப்படுகிறது.

**தேசிய செய்திகள்**

**அசாம்**

**கவுஹாத்தியை ஆறு தென் ஆசிய நாடுகளுடன் இணைக்கத் திட்டம்**

- கிழக்குக் கொள்கையை செயல்படுத்துவதில் பெருமளவு ஊக்கத்தை கொடுப்பதற்காக, அடுத்த ஆண்டு ஜனவரி மாத அளவில் ஆறு தெற்காசிய நாடுகளுடன் கவுஹாத்தியை விமான நிலையத்துடன் இணைக்கப்பட வேண்டும்.

**புது தில்லி**

**ஐஜிஐ விமான நிலையத்தில் சுற்றுலாப்பயணிகளுக்கு உதவி வசதி**

- புதுடில்லியில் உள்ள இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்தில் சுற்றுலாப்பயணிகளுக்கு உதவி மற்றும் தகவல் வசதியை சுற்றுலாத்துறை அமைச்சர் கே.ஜே.அல்போன்ஸ் தொடங்கி வைத்தார்.
- மும்பை, சென்னை, கொல்கத்தா, கயா மற்றும் வாரணாசி ஆகிய இடங்களில் விரைவில் 24X7 வசதியளிப்பு கவுண்டர்களை திறக்க சுற்றுலா அமைச்சகம் திட்டம்.

**மேகாலயா**

**3 வது தேசிய ஆயுர்வேத தினம் 2018**

- 3 வது தேசிய ஆயுர்வேத தினம் - 2018, ஷில்லாங் மேகாலயாவில் அரசின் ஆயுஷ் அமைச்சகத்தால் "Ayurveda for Public Health" என்ற கருப்பொருளில் ஏற்பாடு செய்யப்பட்டது.

**ஜார்கண்ட்**

**திறந்த வெளியில் மலம் கழிப்பது ஒழிக்கப்பட்ட மாநிலமாகிறது ஜார்கண்ட்**

- திறந்த வெளியில் மலம் கழிப்பது ஒழிக்கப்பட்ட மாநிலமாக ஜார்கண்ட், நவம்பர் 15-ந்தேதிக்குள் உருவாகும்.

**சர்வதேச செய்திகள்**

**காமன்வெல்த் நாடுகளுக்கு ஆயுதப்படைகளில் சேரும் தகுதிகள் தளர்த்தப்பட்டது**

- காமன்வெல்த் நாடுகளுக்கு பிரிட்டிஷ் ஆயுதப்படைகளில் வேலைவாய்ப்பு பெறும் விண்ணப்பிப்பதற்கான தகுதிகளை தளர்த்துவதாக பிரிட்டிஷ் அரசு அறிவித்தது.

**அறிவியல் செய்திகள்**

**நாசாவின் ஹப்பிள் காஸ்மிக் புன்னகை முகத்தை ஒத்திருக்கும்[ஸ்மைலி] புள்ளியை கண்டறிந்தது**

- நாசாவின் ஹப்பிள் விண்வெளி தொலைநோக்கி வானில் ஒரு புன்னகை முகத்தை ஒத்திருக்கும்[ஸ்மைலி] விண்மீன் குழுக்களை கண்டறிந்தது.

**வணிகம் & பொருளாதாரம்**

**பிளாக்செயின் வர்த்தக நிதி பரிவர்த்தனை**

- ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் [ஆர்.ஐ.எல்] & எச்எஸ்பிசி பிளாக்செயின் வர்த்தக நிதி பரிவர்த்தனை முறையை அறிமுகப்படுத்தியது.

**தரவரிசை & குறியீடு**

**<u>நீர் தரக் குறியீடு</u>**

- 122 நாடுகளில் 120 வது இடத்தை இந்தியா பெற்றுள்ளது.

## மாநாடுகள்

### ஆயுர்வேதத்தில் தொழில்முனைவோர் மற்றும் வணிக மேம்பாட்டிற்கான தேசிய கருத்தரங்கு

- ஆயுர்வேத மருத்துவத்தில் தொழில்முனைப்பு மற்றும் வர்த்தக மேம்பாடு குறித்த இரண்டுநாள் தேசிய கருத்தரங்கு புதுதில்லியில் தொடங்கியது.
- இந்தக் கருத்தரங்கை நித்தி ஆயோக் ஒத்துழைப்புடன் ஆயுஷ் அமைச்சகம் ஏற்பாடு செய்துள்ளது.
- ஆயுர்வேத மருந்து உற்பத்தியில் ஈடுபட்டுள்ள தொழிலதிபர்கள் மற்றும் பங்குதாரர்களுக்கு இத்துறையில் வர்த்தக வாய்ப்புகளை கண்டறிவதை நோக்கமாகக் கொண்டு இக்கருத்தரங்கு நடத்தப்படுகிறது.

### பொது கொள்முதல் மற்றும் போட்டிச் சட்டம் பற்றிய தேசிய மாநாடு

- இந்திய போட்டி ஆணையம் (CCI) ஏற்பாடு செய்துள்ள பொது கொள்முதல் மற்றும் போட்டிச் சட்டம் பற்றிய தேசிய மாநாடு தில்லியில் நடைபெறுகிறது. பொது கொள்முதல் சுற்றுச்சூழல் அமைப்பில் போட்டி ஆலோசனை மற்றும் முக்கிய பங்குதாரர்களை ஒருங்கிணைக்கும் நோக்கத்துடன் இந்த மாநாடு நடத்தப்படுகிறது.

### 1 வது சீன சர்வதேச இறக்குமதி கண்காட்சி(CIIE)

- சீனாவின் தேசிய கண்காட்சி மற்றும் மாநாட்டு மையம், ஷாங்காயில் நடைபெறும் முதலாவது சீன சர்வதேச இறக்குமதி கண்காட்சியில் (CIIE) இந்தியாவின் பெவிலியனை அங்கு அமைத்துள்ளது.

## திட்டங்கள்

### ஆப்ரேஷன் கிரீன்ஸ்

- ஆப்ரேஷன் கிரீன்ஸ் - நாடு முழுவதும், அனைத்து காலங்களிலும் டி.ஒ.பி பயிர்கள் என அழைக்கப்படும் தக்காளி, வெங்காயம், உருளைக்கிழங்கு ஆகிவை விலை ஏற்ற தாழ்வின்றி கிடைப்பதை உறுதி செய்வதே இதன் நோக்கமாகும்.
- மத்திய உணவு பதப்படுத்துதல் தொழில் அமைச்சகம் ஆப்ரேஷன் கிரீன்ஸ் அமல்படுத்தவதுற்கான நெறிமுறை உத்திகளுக்கு அனுமதியை வழங்கியது.

## புரிந்துணர்வு ஒப்பந்தம்(MoU), ஒப்பந்தங்கள் & மத்திய அமைச்சரவை ஒப்புதல்

### இந்தியா மற்றும் கொரியக் குடியரசிற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம்

- சுற்றுலா மற்றும் விளையாட்டு துறையில் ஒத்துழைப்பை பலப்படுத்த இந்தியா மற்றும் கொரியக் குடியரசு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.

### இந்தியா மற்றும் மலாவிக்கு இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம்

- இந்தியா மற்றும் மலாவி நாட்டுக்கு இடையே குற்றவாளிகளை இரு நாடுகளுக்கு இடையில் ஒப்படைக்கும் ஒப்பந்தம், அணுசக்தி துறையில் சமாதான நோக்கங்களுக்கான ஒத்துழைப்பு, தூதரக மற்றும் உத்தியோகபூர்வ பாஸ்போர்ட்டுகளுக்கு விசா விலக்கு ஆகிய மூன்று உடன்படிக்கைகளில் கையெழுத்திட்டுள்ளன.

## விருதுகள்

- **சர்வதேச பத்திரிக்கை [பிரஸ்] நிறுவன இந்தியா விருது** - நம்ரதா பிஜி அஹுஜா

## விளையாட்டு செய்திகள்

### SAFF U-15 சாம்பியன்ஷிப்

- லலித்பூர், நேபாளத்தில் நடைபெற்ற SAFF U-15 ஆண்கள் கால்பந்தாட்ட சாம்பியன்ஷிப் போட்டியில் பங்களாதேஷ் 3-2 என்ற கணக்கில் பெனால்டி ஷூட் முறையில் பாகிஸ்தானை வென்றது.

### சார்லோர்லக்ஸ் ஓபன் பேட்மிண்டன்

- ஜெர்மனியில் நடைபெற்ற சார்லோர்லக்ஸ் ஓபன் பேட்மிண்டன் ஆண்கள் ஒற்றையர் பிரிவு போட்டியில் பிரிட்டனின் ராஜீவ் ஓசீப்பை தோற்கடித்து இந்தியாவின் சுபாங்கர் டே வென்றார்.

### பாரிஸ் மாஸ்டர்ஸ் டென்னிஸ், 2018

- ரஷ்யாவின் கரேன் கச்சனோவ் உலகின் நம்பர் ஒன் வீரரான ஜோகோவிச்சை வீழ்த்தி பாரிஸ் மாஸ்டர்ஸ் டென்னிஸ் ஆண்கள் ஒற்றையர் பட்டத்தை வென்றார்.

Join Us on FB :

For English – Examsdaily For Tamil – Examsdaily Tamil

For WhatsAPP Group - Click Here